# 1 சுய விளக்கத்துடன் செயற்படுவோம்

நீங்கள் உண்மையிலேயே தனித்துவமானவர். பல்வேறுபட்ட ஆற்றல்கள் மற்றும் திறன்களைக் கொண்டவர். இவ்வாற்றல்கள், திறன்களைப் பயன்படுத்துவதற்கான தேவை அல்லது சந்தர்ப்பம் இதுவரை உங்களுக்குக் கிடைக்காமல் இருந்திருக்கும். இருப்பினும் தாமதமின்றி இன்று தொடக்கம் இதற்காகச் செயற்படுங்கள். உங்களிடம் காணப்படும் உங்களுக்கே உரித்தான விசேட திறன்களை இனங்காணுங்கள். பேச்சாற்றல், நடன ஆற்றல், விளையாட்டுத் திறன்கள், நினைவாற்றல் போன்றன அவற்றுள் அடங்கியிருக்கக்கூடும். இவற்றினூடாகப் பெறுமதி வாய்ந்த ஆற்றல்கள் விருத்தியடைந்து அவை பிரகாசிக்கும்போது நீங்கள் சாதாரண மனிதர்களினின்றும் விசேடமானவராகத் துலங்க முடியும். உங்களது தனிப்பட்ட முன்னேற்றம் மற்றும் ஆளுமை விருத்திக்குரிய பின்னணியை ஏற்படுத்தி, சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து வினைத்திறனுடன் கூடிய இலக்கை அடைவதற்கு மேற்படி அறிவுசார் திறன்கள் உங்கள் சார்பாக வெளிப்படும் எனின் அவை உங்களைப் பிரகாசிக்கச் செய்யும். அத்துடன் இலங்கையர் என்ற வகையில் உங்களது தனித்துவத்தைப் பேணி, பூகோளக் கிராமத்தின் அங்கத்தவராக, நிலைத்து நிற்கக்கூடிய பண்புகளுடன் செயற்படுவதற்கு அவசியமான தேர்ச்சிகளை இப்பாடத்தைக் கற்பதன் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.

## 1.1 சுய ஆற்றல்கள் மற்றும் திறமைகள்

‘‘கல்வி அரங்கம்’’ என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அன்றைய தின நேர்காணலுக்கென சமூகமளித்தவர் சர்வதேச ரீதியிலான சித்திரப் போட்டியில் 1ஆம் இடத்தை வெற்றி கொண்ட இராமகிருஷ்ண மத்திய கல்லூரி மாணவ தலைவி காஞ்சனா ஆவார். காஞ்சனா மற்றும் அறிவிப் பாளர் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற உரை யாடலில் எமது கவனத்தைச் செலுத்துவோம்.



உரு 1.1

**அறிவிப்பாளர்** :- ‘‘கடந்த தினங்களில் பத்திரி கைகள் மூலம் உங்களைப் பற்றிய பல தகவல்களை எமது ரசிகர்களுக்கு அறிய

முடிந்தது. உண்மையிலேயே நீங்கள் ஒரு விசேடமானவர். பல்வேறு துறைசார் திறன்களையுடைய ஒரு மாணவி. கலைத்துறைசார் திறன்களைப் போலவே இலக்கியத்துறை சார்ந்த திறன்களையும் நீங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றீர்கள். மேலும் பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவியாகவும் உள்ளீர்கள். இச்சகல பொறுப்புக்கள் கடமைகளுக்கு மத்தியில் அழகியல் துறையில் இச் சாதனையை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்? ''

**காஞ்சனா** :- ''அனைவருக்கும் வணக்கம்'', நான் முதலில் எனது ஆற்றல்களைச் சரியாக இனங்கண்டு கொண்டேன். இதற்கு எனது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டல் கிடைக்கப்பெற்றது. அத்தோடு இத்துறை சார்ந்த நூல்கள், இலத்திரனியல் ஊடகங்கள், மற்றும் வளவாளர்கள் மூலம் உச்சப்பயனைப் பெற்றேன். இவை அனைத்துக்கும் மேலாக நான் தொடர்ந்தும் பயிற்சிகளில் ஈடுபட்டேன்.''

**அறிவிப்பாளர்** :- ''சர்வதேச மட்டத்துக்குச் செல்ல உங்களுக்கு எவ்வாறு சந்தர்ப்பம் கிடைத்தது?''

**காஞ்சனா** :- ''நான் மைக்கல் ஏஞ்சலோ, பிக்காஸோ போன்றோரின் ஓவியங்கள் மாத்திரமன்றி அவர்களின் வாழ்க்கை வரலாறுகள் பற்றியும் அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினேன். பாடசாலையில் சித்திரப்பாட ஆசிரியை வழங்கிய ஒத்துழைப்பு அளவிட முடியாதது. அவ்வறிவு அனுபவங்கள் மூலம் சித்திரக் கண்காட்சிகள் பலவற்றை நடாத்த என்னால் முடிந்தது. இதன்மூலம் எனது திறமைகள் வெளியுலகிற்குத் தெரிய வருவதன் ஊடாக சர்வதேச மட்டத்துக்குச் செல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.''


**அறிவிப்பாளர்** :- ''உங்களுக்கு வெளிநாட்டுப் புலமைப்பரிசில் ஒன்றும் கிடைக்கப்பெற்றுள்ளது. உங்களிடம் உள்ள வாழ்க்கைத் தொழிற்றகைமைக்கும் எதிர்கால வாழ்வின் சுபீட்சத்திற்கும் இது கைகொடுக்கும் என்பது தெளிவு. இந்நிகழ்ச்சியைக்

கண்டுகளிக்கும் பல்லாயிரக்கணக்கான தொலைக்காட்சி இரசிகர்கள் இச்சந்தர்ப்பத்தில் உங்களது அனுபவங்கள் தொடர்பாக ஓரிரு வார்த்தைகளைக் கேட்க விரும்புவர். நீங்கள் அவர்களுக்கு வழங்கும் அறிவுரை என்ன?''

**காஞ்சனா :-** ''முதலில் தங்களது விசேட ஆற்றல்களையுடைய துறையை இனங்கண்டு அர்ப்பணிப்புடன் அவற்றை விருத்தி செய்து கொள்ள வேண்டும். தமது ஆற்றல்களை விருத்தி செய்வதற்காகச் செலவிடும் ஒவ்வொரு நிமிடத்திலும் ஆளுமை மற்றும் சுய கௌரவம் கட்டியெ ழுப்பப்படுவதைப் போன்று எதிர்கால வாழ்வும், வெற்றி கரமாவதற்குக் காரணமாக அமையும். எக்காரணங் கொண்டும் உங்களைத் தரக்குறைவாக மதிப்பீடு செய்ய வேண்டாம். உங்களிடமும் சிறு பலவீனங்கள் இருக் கக்கூடும். அவ்வாறான பலவீனங்களை அடையாளங் கண்டு இழிநிலைப்படுத்திக் கொள்ள வேண்டும் இவ்வாறே அதிகமானோர் தமது இறுதிக் காலத்தில் உலகப்புகழ் பெற்றனர். ஐன்ஸ்டன், ஐசாக் நியூற்றன், டோல்ஸ்டோய் போன்ற புகழ்பெற்ற புத்திஜீவிகளின் வாழ்க்கை வரலாறுகள் இதனையே உணர்த்துகின்றன. அவர்களின் ஆற்றல்களைப் பிறர் இனங்காண்பதற்கும் அதிக காலம் சென்றுள்ளது. நான் உங்களிடம் கூற விரும்புவது யாதெனில் உங்களது ஆற்றல்கள் இனங் காணப்படும்வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். இன்றே அவ்வாற்றல்களை வெளிப்படுத்தி உங்கள் திறமைகளை வெளிக் காட்டுங்கள். இதன் மூலம் நீங்கள் உலகுக்கே சிறந்த ஒரு முன்மாதிரியை வழங்க முடியும்.''

தொலைக்காட்சி உரையாடல் மூலம் நீங்கள் சந்தித்த காஞ்சனாவிடம் அழகியல்சார் திறமைகள் மாத்திரமன்றி மொழித்திறமை, தலைமைத்துவ ஆற்றல், சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல்களைப் போன்று ஆய்வுரீதியிலான தேடல்களும் இருப்பது தெளிவாகும். உங்களிடமும் உங்களுக்கேயுரிய விசேட ஆற்றல்கள், திறமைகள் ஏராளம் இருக்கின்றன. கீழே தரப்பட்டுள்ள குறிப்பை அவதானித்து உங்களது ஆற்றல்கள் எவ்வாறு பரந்து காணப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

பேராசிரியர் ''ஹொவார்ட் காட்னர்'' அவர்களினால் ''பல்வகைப்பட்ட அறிவுசார் கோட்பாடு'' (Multiple Intelligence Theory) இதற்கமைய ஒருவரிடம் பல்வேறுபட்ட அறிவுசார் ஆற்றல்கள் உள்ளன. அவை பல்தரப்பட்ட ஆற்றல்கள் எனக்கூறமுடியும். அவை கீழே காட்டப்படும் வரைபடத்தின் மூலம் விளக்கப்படுகின்றன.





சகலரிடமும் மேலே குறிப்பிட்டதைப் போன்ற அறிவியல் சார்ந்த ஆற்றல்கள் காணப்படுவதுடன் இவற்றுள் ஒன்றோ அல்லது பலவோ சிறப்பாகக் காணப்படலாம். கீழே குறிப்பிடப்பட்டுள்ள புத்திஜீவிகளின் வரலாறுகளை அவதானிக்கும்போது இதனை உங்களால் விளங்கிக் கொள்ள முடியும்.

★ ஸ்ரீசந்திரரத்ன மானவசிங்க ஒரு கவிஞர், பாடலாசிரியர், எழுத்தாளர், பேச்சாளர் மற்றும் அரசியல்வாதியும் ஆவார். அவரது கௌரவமிக்க ஆளுமை கட்டியெழுப்பப்பட்டது கவிதைகளினாலேயாகும்.

★ அல்பேட் ஐன்ஸ்டன் பௌதிகவியல் பேராசிரியரும் திறமைமிக்க வீணைவித்துவானும் ஆவார்.

★ கணிதம் மற்றும் தர்க்கவியல் திறமைமிக்க கலிலியோ கலிலி சிறந்த எழுத்தாளராவார். **''நட்சத்திரங்களின் தகவலாளன்''** என்பது இவரது ஒரு நூலாகும்.


ஸ்ரீ சந்திரரத்ன மானவசிங்க


அல்பேட் ஐன்ஸ்டன்


கலிலியோ கலிலி

நீங்கள் திறமைகள் மற்றும் ஆற்றல்களில் பூரணத்துவம் கொண்டவராக இருந்தபோதிலும் அவ் ஆற்றல்கள் மற்றும் திறமைகளை ஒரு வரம்புக்குள் மாத்திரம் வரையறுத்துக் கொள்வது பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. உங்களிடம் சுயவிளக்க ஆற்றல் அதாவது தம்மைப்பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இருக்க வேண்டியது மிக முக்கியமாகும். கீழே காணப்படும் கூற்றிலிருந்து இவை பற்றி உங்களால் தெரிந்துக் கொள்ள முடியும்.

**தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை உட்கொண்டமையினால் ஓட்டவீரர் ஒலிம்பிக் பதக்கத்தை இழந்தார்.**

வாழ்வின் உண்மை யதார்த்தத்தைச் சரியாக விளங்கிக் கொள்வதும் அதனூடாக சுயவிசுவாசம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதும் மிக முக்கியமாகும். உங்களது ஆற்றல்களிலிருந்து உச்சப் பயனைப்பெற முடிவது, வாழ்வின் நெகிழ்வுத்தன்மையை இனங்கண்டு அவற்றைத் தமது ஆற்றல்களுடன் தொடர்புபடுத்துவதன் மூலமாகும்.

தமது அறிவு சார் ஆற்றல்களை வாழ்வின் யதார்த்தத்துடன் இணைத்துக் கொண்ட பின்வருவோரின் வாழ்வு தொடர்பாக உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.

## கலைஞர் மஹகமசேகர அவர்கள்



மஹகமசேகர

பல்வேறு ஆற்றல்கள் நிறைந்த மஹகம சேகரவின் ஆக்கங்கள் மூலம் விளக்கப்பட்டிருப்பது வாழ்வின் யதார்த்தம் பற்றிய செய்தியாகும். ''மனோமந்திர'' ''துன்மங்ஹன்திய'' போன்ற நாவல்கள் மூலம் அறிமுகமாகும் நேரடிப் பாத்திரத்தில் அவர் வாழ்வின் பல்வகைமையை அறிந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் ஓர் நாவலாசிரியர், கவிஞர், பாடலாசிரியர் மாத்திரமன்றி மொழிபெயர்ப்பாளரும் ஆவார். கல்வி அதிகாரியாகத் தொழில் பார்த்த அவர் கலையின் ஊடாகச் சிறந்த ஆளுமையை வளர்த்துக் கொண்டது தமது கலை உணர்வுகளுடன் வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் வாழ்வின் யதார்த்தங்களைக் கண்டு கொள்ளும் ஆழமான ஞானத்தை தொடர்புபடுத்தியதன் மூலமேயாகும்.


## சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்



பொன்னம்பலம் இராமநாதன்

சட்டத்தரணியாகவும், சிறந்த பேச்சாளராகவும் அரசியல் வாதியாகவும் திகழ்ந்த இவரிடம் பல்வேறுபட்ட ஆற்றல்கள் காணப்பட்டன. சமூகத்தையும், தனிமனிதர்களையும் நியாயமாகவும், பக்கச்சார்பின்றியும் நன்னோக்குடனும் பார்க்கும் ஆற்றலின் காரணமாகவே இவர் பிரபல்யமிக்கவராக விளங்கினார். தமிழ்த்தலைவராக இருந்தபோதிலும் இலங்கை மக்களுக்குப் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுத்தர இரவு பகலாகப் பாடுபட்டார். இனமத பேதமின்றி அநீதிக்கு எதிராகப் போராடினார். பிறப்பில் இந்துவாக இருந்த போதிலும் பௌத்த மதக் கோட்பாடுகளையும் கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளையும் மதித்துச் செயற்பட்டார்.

## கட்டடக்கலை நிபுணர் ஜிப்ரி பாவா அவர்கள்


ஜிப்ரி பாவா

உலகப்புகழ்பெற்ற ஆகாகான் விருது பெற்ற இவர் சுற்றாடலை நேசிக்கும் கட்டடக் கலை நிபுணராவார். இவர் தமது சகல கட்டட நிர்மாணங்களையும் சுற்றாடல் சமநிலையில் பாதிப்புக்கள் எவையும் ஏற்படாதவாறே திட்ட மிட்டார். இதனாலேயே இவர் வாழ்வினதும் இயற்கை வளத்தினதும் சமநிலையைப் பேணிய கட்டடக் கலைஞராகத் திகழ்கிறார். இவர் விருது பெற்ற கலைஞரானது சுய விளக்கம், மற்றும் சூழல் மீதான பரிவு போன்ற மனித நேயங்களைத் தமது திறமைகளுடன் இரண்டறக் கலந்து கொண்டமையினாலாகும். நமது நாட்டின் புதிய பாராளுமன்றத்தைத் திட்டமிட்டு அழகானதாக நிறுவிய பெருமை இவரையே சாரும்.

- ♦ உங்களது கலையுணர்வுகளுடன் வாழ்வின் அனுபவங்களை இணைத்து கௌரவம் மிக்க பிரசையாக ஆகுங்கள்.
- ♦ உங்கள் திறமைகளை இன, மத, குல பேதமின்றி மனிதநேயத்தின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துங்கள்.
- ♦ உங்களது ஆற்றல்களை இயற்கையின் இன்பங்களை அனுபவிக் கவும், அவற்றை அர்த்தமுள்ளதாக்கவும் பயன்படுத்துங்கள்

### செயற்பாடு I

தரப்பட்டுள்ள விபரங்களினால் குறிப்பிடப்படும் நபர்களின் பெயர்களைக் கீழே உள்ள அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்து எழுதுங்கள்.

1. சிறுபராயம் தொடக்கம் விஞ்ஞானப் புனைகதைகளை வாசிப்பதன் மூலம் விரிவான அறிவைப் பெற்றுக் கொண்ட இவர் அவ் அறிவு ஆற்றல்கள் மூலம் ‘‘செய்மதித் தொழினுட்பத்தின் தந்தை’’ எனும் புகழ்பெற்ற எமது நாட்டின் கௌரவப் பிரஜையாகும்.

2. சிகிரியப்பாடல்களைப் பிரதி செய்து அவற்றின் கருத்தை விளக்கியவர் இவராகும். புராதன கற்குகைகளில் உள்ள பிராமி எழுத்துக்களை வாசித்துத் தெளிவு படுத்தியதோடு சந்திரவட்டக்கல், காவற்கல், தூபிகள்

தொடர்பாகவும் முழு உலகிற்கும் விளக்கினார். சிங்களம், பாளி, சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் உட்பட பல மொழிகளைத் தெரிந்து கொண்டிருந்த இவர் 1890ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வுத்திணைக்களத்தின் முதலாவது இலங்கைத் தொல்பொருளியல் ஆணையாளராகவும் விளங்கினார்.

3. தனது தந்தையின் மறைவிற்குப் பின்னர் பெரிய தந்தையின் பல்வேறுபட்ட கொடுமைகளுக்கு முகங்கொடுத்தார். சைக்கிளோட்டப்போட்டியில் சிறந்த திறமையை வெளிக்காட்டிய இவர் பிரான்சில் நடைபெற்ற பிரபல சைக்கிளோட்டப் போட்டிகளில் அடுத்தடுத்து ஏழு தடவைகள் வெற்றி பெற்றார். தம்மைப் பாதித்த புற்றுநோயைச் சவாலாக ஏற்றுக்கொண்டே இவ்வாறான வெற்றிகளைப் பெற்றார்.

4. நுரை பொங்கியவாறு வேகமாகப் பாய்ந்து வரும் நீர்வீழ்ச்சி ஒன்றைப் பார்த்தவாறு நின்ற இவர் மனதில் இலட்சக்கணக்கான விளக்குகள் ஒளிர்வது போன்ற எண்ணம் உதித்தது. இவ் எண்ணம் லக்ஸ்பான (இலட்சக்கணக்கான விளக்குகள்) நீர்மின்வலு நிலையத்தை அமைப் பதற்கு வழிகோலியது. இவர் நீர்மின்வலுவின் தந்தை எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றார்.

5. வறுமையின் காரணமாகக் கல்வியைக் கைவிட்டுத் தந்தையின் வெடிபொருள் உற்பத்திக் தொழிற்சாலைக்குச் சென்ற இவர் அவ் உற்பத்திகளின் பயங்கர விளைவை உணர்வதற்கு மிக நீண்டகாலம் செல்லவில்லை. தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தினால் தனது சகோதரனையும் தந்தையையும் இழந்தார். பின்னர் இவர் ஈட்டிய செல்வத்தை உலகின் உத்தம புருஷர்களுக்காக நோபல் விருதை வழங்குவதற்காகப் பயன்படுத்தினார்.


(டி.எம். விமலசுரேந்திர, அல்பேட்நோபல், செனரத் பரணவிதான, ஆதர் சீ கிளாக், லான்ஸ் ஆம்ஸ்ரோங்)

## 1.2 வாழ்வின் மூலம் கற்போம்

வாழ்வின்போது நாம் எதிர்நோக்குகின்ற மகிழ்ச்சிகரமான அல்லது துக்ககரமான அனுபவங்கள் அனைத்தையும் எமது எதிர்கால வெற்றிக்காகப் பயன்படுத்திக் கொள்ளமுடியுமாயின் அது எம்மிடம் காணப்படும் அறிவியல் சார்ந்த ஆற்றல்களில் இருந்து பெற்றுக்கொண்ட உச்சப் பயன்பாடாகும். எமது வீடு, பாடசாலை என்பவற்றைப் போன்றே அவற்றிற்கு வெளியே உள்ள எமது அயற்சமூகமும் எமக்குப் பாரிய அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்கின்றது. புத்தி ஜீவிகள் தமக்கு உடல், உள ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்திய துயரமான சம்பவங்கள் மற்றும் உடல், உள ரீதியாகக் கிடைக்கப் பெற்ற



இலவச பாடநூல் விநியோகத்திற்காக

அனுபவங்களைப் பயன்படுத்தி உயரிய ஆக்கங்களை உருவாக்கி அவற்றை உலகிற்குச் செல்வங்களாக வழங்கினர். மேகதூதம், ஒலிவர் ருவிஸ்ட் போன்ற ஆக்கங்களும் இவ்வாறு உருவானவையாகும்.



ஆன் பிராங் எழுதிய தினக்குறிப்பு

ஆன் பிராங்க் என்னும் யூத இனச் சிறுமியின் பெயர் உலகில் பிரசித்தி பெற்றது. இதற்குக் காரணமாக அமைவது தமது துன்பகரமான அனுபவங்களைப் பற்றி அவள் எழுதிய தினக்குறிப்பேயாகும். (Ann Franck's Diary) ஹிட்லரின் நாசி இராணுவத்தின் கொடிய நிர்வாகத்தின்கீழ் தனது சிறு பராயத்தை இருள் மிகுந்த கூட்டினுள் கழிக்க வேண்டியேற்பட்டது. அவள் தன்னைப் பற்றித் தனது தினக்குறிப்பில் **''சிறகு வெட்டிவிடப்பட்ட ஒரு சிறிய பறவை''** எனக் குறிப்பிட்டிருந்தாள். பதின்மூன்றாவது வயதில் அவள் தனது அனுபவங்களை எழுதியமை வரலாற்றில் புதியதொரு திருப்பு முனையாகும்.



டபிள்யு.டி அமரதேவ

டபிள்யு.டி அமரதேவ அவர்கள் பிரபல சங்கீத வித்துவானாக மாறுவதற்கு வழிவகுத்தது தனது தந்தையின் மர வேலைத்தளத்தில் கிடைத்த அனுபவமாகும். அங்கு திருத்த வேலைக்கெனக் கொண்டு வரப்பட்டிருந்த வயலின் ஒன்றினை வாசித்ததன் மூலமே இவ்வனுபவத்தை அவர் பெற்றுக் கொண்டார்.




லியோ டோல்ஸ்டோய்

அவ்வாறே **''லியோ டோல்ஸ்டோய்''** என்ற உலகப் புகழ் பெற்ற மாபெரும் இலக்கியவாதிக்கு வெற்றிகரமான ஆக்கங்களை உருவாக்கக்கூடிய பின்னணியை ஏற்படுத்தியது அவர் ரஷ்ய நாட்டு சார் மன்னரின் நிர்வாகத்தின் ஊடாகப் பெற்றுக் கொண்ட அனுபவங் கயோகும்.

அதே போன்று கட்புலனற்ற மாணவர் என்ற வகையில் பெற்ற அனுபவமே **''லூயிபிரேல்''** என்பவருக்குத் தனது 15வது வயதில் கட்புலன் அற்றோருக்கு எழுத வாசிக்க முடியுமான முழுமையான அகராதி ஒன்றை உருவாக்க வழி வகுத்தது.

**''டேவிட் கோப்பர் பீல்ட்''** எனும் நாவலை எழுதிய **''சாள்ஸ் டிக்கன்ஸ்,''** **''ஜேன் அயர்''** என்னும் நாவலை எழுதிய **''சாலட் புரோன்டே''** போன்ற எழுத்தாளர்களைப் பற்றி நீங்கள் அறிந் திருக்கக்கூடும். இவர்கள் தமது சிறு பராயத்தில் பல்வேறு வகையான துன்ப துயரங்களுக்கு உட்படாதிருந்திருந்தால், நீங்கள் இத்தகையை இனிமையான உயர்மட்ட ஆக்கங்களின் சுவையை அனுபவிக்கும் சந்தர்ப்பத்தை இழந்திருப்பீர்கள்.



1.11 லூயிபிரேல்

உங்களது வாழ்வில் மகிழ்ச்சிகரமான அனுபவங்கள் மட்டுமன்றி துயரமான அனுபவங்களும் ஏற்படுகின்றன என ஒரு கணம் நினையுங்கள். இவை துன்பப்படுவதற்கோ, கண்ணீர் விடுவதற்கோ அன்றி, இவ் அனுபவங்களை வெற்றிகரமான வாழ்க்கைக்கான ஓர் அடித்தளமாக ஆக்கிக் கொள்ளுங்கள். அனுபவங்களைக் கொண்டு உலகிற்கு அன்பளிப்பாக வழங்கக்கூடிய உயர்மட்ட ஆக்கங்களை உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றி பெற்றவராகத் திகழ்வதற்கு உங்களால் முடியும்.

## 1.3 பூகோளக் கிராமத்திற்கான அறிவு வாயில்கள்

சமகாலத்தில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பது அறிவினைத் தேடிச் செல்லும் சமூகத்திலேயாகும். ஒரு சமூகம் அபிவிருத்தி அடைவது மாற்றமுறும் உலகின் நவீனத்துவத்திற்கும் மாற்றங்களுக்கும் ஏற்ப இசைந்து செல்வதாலாகும். இதற்கென எமக்குத் துணைபுரிகின்ற ஊடகங்கள் பல காணப்படுகின்றன.




இவ்வனைத்து ஊடகங்களையும் அறிவியல் ரீதியாகக் கையாளுவதற்கு உங்களிடத்தில் சுயவிளக்கமும், விரிவான அறிவும் இருக்க வேண்டும். அப்படியாயின் தமக்கும் தமது கலாசாரத்திற்கும் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்வதற்கும் தேவையற்றவற்றைப் புறந்தள்ளுவதற்கும் உங்களுக்கு ஆற்றல் இருக்க வேண்டும்.

## நூல்களினூடாக உலகினைக் காண்போம்

வாழ்க்கை அனுபவங்களைப் போன்றே சிறந்த புத்தகங்களும் உங்கள் ஆற்றல்களை மேம்படுத்த உதவும் என்பதனைப் பின்வரும் வாசகங்கள் மூலம் அறியலாம்.

- புத்தகங்களை வாசிப்பது மூளைக்குரிய பயிற்சியாகும். **சேர் ரிட்சட் ஸ்டீவ்**
- முதலில் எழுத்துக்கு அடிபணியுங்கள். பின்னர் எழுத்து உங்களுக்கு அடிபணியும். **முனிதாஸ குமாரதுங்க**
- வாசிப்பதற்குப் பொருத்தமான நூல்கள் அரிது. அவற்றை வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணத்துவம் அடைகிறான். **பிரான்ஸிஸ் பேகன்**
- சிறந்த நூல்களை முதலில் வாசியுங்கள். அன்றேல் அவற்றை என்றும் உங்களுக்கு வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காது. **தோரோ**
- புத்தகமொன்றின் பக்கங்களுக்கிடையே யதார்த்தமான மனிதர்கள் வாழுகிறார்கள். **ஈ.எம். போஸ்டர்**

சகல சந்தர்ப்பங்களிலும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக எழுதப்பட்டுள்ள சிறந்த புத்தகங்களை வாசிக்க முயற்சி செய்யுங்கள். புத்தகங்கள் உங்கள் அறிவியல் ஆற்றல்களை மேம்படுத்தவும், வெற்றிகரமான வாழ்வை ஏற்படுத்தவும் உதவும். கீழே காட்டப்பட்டுள்ள கேலிச் சித்திரத்தைப் பரிசீலித்துப் பாருங்கள்.



உரு 1.12

புத்தகங்கள் மூலம் அறிவைப் பெற்றுக் கொள்ளும் ஒருவருக்கு உலகில் உரிய இடம் கிடைப்பதுடன் எச்சந்தர்ப்பத்திலும் அவர் உளரீதியாகச் சிறைப் படுத்தப்பட மாட்டார் என்பது இப்படத்தின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**நூல்கள் மூலம் உரிய அறிவைப் பெற்றுக் கொள்ளும்வரை நீங்களும் இவ்வுலகின் கைதிகள் ஆவீர்கள்.**

**செயற்பாடு II**

✶ மாணவர்களைப் பல குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவும் தாம் வாசித்த இலக்கிய நூல்களில் தமக்கு ரசனையூட்டிய மறக்கமுடியாத சந்தர்ப்பம் ஒன்றை (வாழ்க்கைக்கு முன்மாதிரியாகப் பெறக்கூடிய) நடித்துக் காட்டுங்கள்.


## 1.4 சவால்கள் வாழ்வுடன் கைகோர்த்து வரும்

உலகில் காணப்படும் உயர் கலை ஆக்கங்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் போன்றன அவற்றின் கண்டுபிடிப்பாளர்கள் தமது வாழ்வில் எதிர்கொண்ட சவால்கள் காரணமாகவே உருவாகின.

**மேகங்களும், கடுமையான காற்றும் இன்றி வானவில் தோன்ற முடியாது வாழ்வின் நிலைப்பாட்டிற்கு சவால்களும் அவ்வாறே அவசியமாகின்றன.**

**''மாக்ஸிம் கோர்க்கி''** என்ற ரஷ்ய எழுத்தாளருக்கு வறுமை பாரிய சவாலாக இருந்தது. அதுபோன்று அவரது படைப்பாற்றல்களுக்கு ரஷ்ய ஆட்சி நிர்வாகமும் சவாலாக இருந்தது. அவர் இச்சவால்கள் அனைத்தையும் வெற்றி

கொண்டது சிறைவாசம் கொண்டிருந்த காலத்தில் **''தாய்'', ''பிரகாசமற்ற உலகு'', ''பிரகாசமான பிள்ளைகள்''** போன்ற உலகப் புகழ்பெற்ற படைப்புக்கள் பலவற்றை உலகிற்கு வழங்கியதன் மூலமேயாகும். சிறைவாழ்வின் கொடுமைகஙடாக காச நோயாளியாக மரணித்த போதிலும் அவர் உலகைச் சிந்திக்கத் தூண்டும் பல விடயங்களை விட்டுச் சென்றுள்ளார்.



உரு 1.13
மாக்ஸிம் கோர்க்கி

**''ஒருவனைச் சிறைப்படுத்தினாலும் அவனது சிந்தனைகளைச் சிறைப்படுத்த முடியாது'' என்பதே அவர் உலகுக்கு வழங்கிய படிப்பினையாகும்.**

**'தோமஸ் அல்வா எடிசன்'** தனக்குச் சொந்தமான அனைத்து சொத்துக் களையும் செலவு செய்து பல்லாண்டு காலமாகச் சேர்த்த சகல விஞ்ஞான உபகரணங்களையும் உள்ளடக்கிய ஆய்வுகூடம் ஒரு நொடிப்பொழுதில் தீப்பற்றியது. அவர் அதற்காக அற்ப அளவும் கவலைப்படவோ, பின்னடையவோ இல்லை. அவர் கூறியது ''நாளைக் காலை முதல் அவை அனைத்தையும் மீளக் கட்டியெழுப்புவேன்'' என்பதாகும்.

நீங்களும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் **''நாளைக் காலையில் இருந்து என்றன்றி'' ''இப்போது முதலே''** மீளக் கட்டியெழுப்ப முயலுங்கள்.

பரீட்சையில் சித்தியடையாதபோது அல்லது வேறு ஏதாவதொரு காரணத்தினால் எதிர்பார்ப்பினை இழக்கும் சந்தர்ப்பத்தில் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிபவர்கள் இவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாத, தன்னம்பிக்கையிழந்த பயந்த சுபாவம் கொண்டவர்களேயாவர்.

எமது வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்கள் சில எம்மால் மாற்ற முடியாதவை அச்சந்தர்ப்பத்தில் நாம் செய்ய வேண்டியது அவற்றுக்கு இசைவாக்கம் அடைவதாகும்.

**எம்மால் காற்றினை நிறுத்த முடியாது. ஆனால் காற்று வீசும் திசையை அறிந்து எம் வாழ்க்கைப் பயணத்தை மாற்றியமைக்க முடியும்.**

**ஒப்படை**

1. நீங்கள் வாசித்துள்ள புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| வாசித்த திகதி | புத்தகத்தின் பெயர் | நூலாசிரியர் | இப்புத்தகங்கள் மூலம் உங்கள் வாழ்க்கைக்குக் கிடைத்த பயன்மிக்க படிப்பினைகள் |
|---|---|---|---|
| | | | |

2. மாட்டின் விக்ரமசிங்க, ஜீ.பி சேனாநாயக்க, அன்டன் செக்கொப், நெல்சன் மண்டேலா போன்ற புகழ்பெற்றவர்கள் தொடர்பான தகவல்கள் ஊடாகப் பின்வரும் தலைப்புகளின் கீழ் தகவல்களைத் திரட்டுங்கள்.
அவர்களின் திறன்கள், வாழ்க்கைச் சவால்கள், உயர் படைப்புக்கள், பெற்ற விருதுகள்.

## 1.5 பூகோளக் கிராமத்தினுள் பிரவேசிப்போம்

மஞ்சித, சதுாசன்,மற்றும் ரிபான் ஆகியோர் ஒன்பதாம் தரத்தில் கல்வி கற்கும் நண்பர்களாவார். பாடசாலை ஓய்வு நேரத்தின்போது இம்மூவருக் குமிடையே நிகழ்ந்த உரையாடல் கீழே தரப்பட்டுள்ளது.

**சதுாசன்** :- இன்று எமது இலங்கை கிரிக்கெட் அணிக்கும் நியுசிலாந்து அணிக்குமிடையிலான போட்டி இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறுகின்றது. எனவே வீட்டு வேலையாகக் கொடுக்கப்பட்ட கணிதப்பயிற்சியை இப்போதே செய்வோம்.

**மஞ்சித** :- ஆம். எமது தொலைக்காட்சியில் பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் நேரடியாக இப் போட்டியைப் பார்க்க முடியும்.

**ரிபான்** :- இங்கிலாந்து இருப்பது எவ்வளவு தூரத்தில் எனினும் எங்களுக்கு அங்கு நடைபெறும் போட்டியை எமது வீட்டில் இருந்து கொண்டே பார்க்க முடிகிறது. அதுமட்டுமா? பந்திற்கு முகம் கொடுக்க முன்னர் துடுப்பாட்ட வீரர் அதற்குத் தயாராவதற்காக கிரிக்கட் மட்டையை நிலத்தில் தட்டும் சத்தம் கூட அதே பொழுதில் எமக்குக் கேட்கக் கூடியதாக இருக்கிறது. அம்மைதானத்திலே நாம் அருகில் இருப்பது போல் உணர்வைப் பெறுகிறோம்.

**மஞ்சித :-** தற்போது உலகம் சுருங்கியுள்ளது. தொடர்பாடல் தொழினுட்ப முன்னேற்றம் காரணமாக உலக நாடுகள் வேகமாக நெருங்குகின்றன.

**சதூசன் :-** உலகம் சுருங்குகின்றது........? சில நாடுகளுக்கிடையே பல்லாயிரக்கணக்கான கிலோமீற்றர் தூரம் உள்ளது. அது மட்டுமல்ல கடல்கள், சமுத்திரங்கள், பாலைவனங்களும் அவற்றின் இடையே அமைந்துள்ளன.

**ரிபான் :-** அது உண்மை தான். நாடுகள் ஒன்றுக்கொன்று தொலைவில் அமைந்துள்ள போதிலும், அச்சகல நாடுகளிலும் வாழும் மக்கள் நெடுங்காலந் தொட்டு ஒத்துழைப்புடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு வாழ்வதற்கு முயற்சிக்கின்றனர்.

**சதூசன் :-** இனம், மதம், மொழி, நிறம் மற்றும் உணர்வுகள் என்பவற்றில் எமது மக்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவர்கள். எது எவ்வாறாக இருப்பினும் மனித உரிமைகளின் அடிப்படையில் யாவரும் சமமானவர்களே! என மனித உரிமை தொடர்பான சர்வதேசப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனிதர்களுக்கு ஒருவரோடு ஒருவர் ஒத்துழைப்புடன் செயற்பட முடியும்.

**ரிபான் :-** உண்மையிலேயே உலகில் வாழும் மக்கள் பல்வேறுபட்டவர்கள் போலத் தென்பட்டாலும் அவ்வேறுபாடுகளை விட பல பொருத்தப்பாடுகளும் இருக்கின்றன எனத் தற்போது எம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது அல்லவா?

**மஞ்சித் :-** ஆம். கிரிக்கெட்டைப் போன்று விளையாட்டில் மாத்திரமல்ல, வணிகம், சர்வதேச அமைப்புக்களைத் தாபித்தல், சுற்றுலாக் கைத்தொழில், அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது, அனர்த் தங்களின் போது உதவிகள், நன்கொடைகளை வழங்குதல் போன்ற செயல்களின்போது, பல்வேறு நாடுகளின் வித்தியாசமான கலாசாரங்களையுடைய மக்களின் ஒற்றுமையைக் காணமுடியும். உண்மையிலேயே முழு உலகும் ஒரே கிராமத்தைப் போன்றது. ஒவ்வொருவரது தகவல்கள், விருப்பு, வெறுப்புக்களைச் சிறந்த முறையில் அறிந்து வைத்துள்ளனர்.

**ரிபான் :-** ஆம்! பூகோளமயம் எனப்படுவது உலக நாடுகள் இவ்வாறு நெருக்கமாகச் செயற்படுவதுதானே?

சதுாசன் :- பூகோள மயமாக்கத்தின் காரணமாகப் பல்வேறு கலாசாரங்களுக் குரித்தான அறிவு மற்றும் தொழினுட்பம் என்பவற்றை முழு உலகிலுமுள்ள மக்களின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தமுடியும்.

மேற்கூறப்பட்ட உரையாடலின்படி உலக மக்கள் பல்வேறு கலாசாரங்களுக்கு உட்பட்டவர் களாக இருந்த போதிலும் ஒருவரோடொருவர் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றனர் என உங்களுக்கு விளங்கியிருக்கும். அப்படியாயின் தொழினுட்ப முன்னேற்றத்துடன் சேர்ந்து உலகம் முழுவதும் ஒரே கிராமமாகச் செயற்படும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.



படம் 1.14 பூகோள மயமாதல் சித்திரக் கலைஞர் ஒருவரின் பார்வையில்

**பூகோள ரீதியாகத் தொலைவு எனும் நிலையைத் தாண்டி சமூக ரீதியாக உலகம் அண்மித்துச் செயற்படுவது பூகோளமயமாதல் எனக் கருதப்படுகிறது.**

பூகோளமயம் காரணமாக நன்மைகளைப் போன்று தீமைகளும் ஏற்பட முடியும்.

| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| ★ சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடைதல். | ★ உற்பத்தி மற்றும் வளப்பயன்பாடு அதிகரித்தல். |
| ★ புதிய கலாசாரங்கள் தொடர்பான அறிவுப் பரிமாறல்கள் இடம்பெறல். | ★ சூழல் பிரச்சினைகள் அதிகரித்தல். |
| ★ தொழிற் சந்தை விரிவடைதலும் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாதலும். | ★ எயிட்ஸ் போன்ற நோய்கள் பரவுதல். |
| ★ சர்வதேச வர்த்தகம் விரிவடைவதுடன் மேலும் வினைத்திறன் கொண்டதாக மாறுதல். | ★ பயங்கரவாதம் போதைப்பொருள் போன்றவற்றின் பயன்பாடு அதிகரித்தல். |
| ★ அறிவு, தொழினுட்பம் என்பன பரவலடைதல். | ★ பலமான கலாசாரங்கள் மேம்படுவதுடன் ஏனைய கலாசாரங்கள் இழிவாக்கப்படுவதாகக் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படல். |

கலாசாரம் என்பது அறிவு, பின்பற்றுதல்கள், சட்டம், கலை, ஒழுக்க விழுமியங்கள், நம்பிக்கைகள், உற்பத்திகள், மதிப்பீடு மற்றும் சமூகத்தில் வாழும் தனி நபர் என்ற வகையில் மனிதனால் பெற்றுக் கொள்ளப்படும் பழக்கங்கள், வழமைகள் மற்றும் ஆற்றல்களின் கூட்டுமொத்தமாகும்.

**ஈ.பீ.டய்லர்.**

சூரியன் உரிமையாவது எத்தேசத்திற்கு? சந்திரன் உரிமையாவது எந்த நாட்டின் எல்லைக்கு? நீர் உரிமையாவது எச்சமயத்திற்கு? காற்று உரிமையாவது எக்குலத்திற்கு? பூகோளம் உரிமையாவது எந்த இனத்திற்கு? மனிதன் இச்சகல இன, மத குல பிரதேச பேதங்களைக் கடந்து செல்லும் ஒரு இடத்தில் இருக்க வேண்டும். அங்குதான் அவனுக்கு சத்தியம் புலப்படும். **குரு மஹாராஜ் - இந்தியா**

**செயற்பாடு III**

‘‘பூகோள மயமாதல் நீண்ட காலம் முதல் இடம்பெற்றாலும் அது துரித முன்னேற்றம் கண்டது சமீப காலத்திலேயாகும்’’ இக்கருத்துடன் உங்களுக்கு இணங்க முடியுமா? உங்கள் விடைக்குரிய காரணங்களை ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

## 1.6 பூகோளக் கிராமத்தினுள் இலங்கையின் கௌரவத்தை மிளிரச் செய்வோம்

அண்மையில் இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட வெளிநாட்டவர் ஒருவரால் எழுதப்பட்ட அறிக்கை ஒன்றின் தமிழ் மொழிபெயர்ப்பு கீழே தரப்படுகிறது. இந்த அறிக்கையை நன்கு வாசித்து, பூகோளக் கிராமத்தினுள் இலங்கையின் கௌரவத்தினை மிளிரச் செய்வதற்கு உங்களால் செய்யமுடியுமான பங்களிப்பைப் பற்றிக் கவனம் செலுத்துங்கள்.

### இலங்கையின் பாரம்பரிய உரிமை

இயற்கைக் கலையையும், உன்னதமான கலாசாரப் பாரம்பரியங்களின் பெறுமதியையும் கண்டுகளிக்க விரும்பும் ஒருவராயின் அவர் இலங்கைக்கு வருவது பொருத்தமானது என்பது எனது கருத்தாகும். வெப்பவலயத்துக்குட்பட்ட இந்து சமுத்திரத்தில் ஒரு தீவாக விளங்கும் இலங்கை உலகின் ஏனைய சகல நாடுகளையும் விட விசேடமான சுற்றாடல் மற்றும் கலாசாரப் பண்புகள் நிறைந்த

ரம்மியமான நாடாகும். இது சுற்றுலா சுவர்க்கமாகும். வளம்மிக்க அழகான கடற்கரையின் பெறுமதியை வர்ணிக்க முடியாது. காலநிலை வலயங்கள் பலவற்றிலும் பரவிக் கிடக்கும் காடுகள் மற்றும் அவற்றில் வாழுகின்ற உயிரினங்கள் என்பவற்றைக் கண்டுகளித்த நான் ஒரு பாக்கியசாலியானேன். மத்திய மலைநாடும் ஈர நிலங்கள், நீர்வீழ்ச்சிகள், ஆறுகள் என்பன நான் முன்பு ஒரு போதும் காணாத அழகு நிறைந்த கண்கொள்ளாக் காட்சிகளாயின.


யால சரணாலய யானைகள்


அழகு நிறைந்த கடற்கரை



மனதைக் கொள்ளை
கொள்ளும் நீர்வீழ்ச்சி


உரு 1.16 தேசியக் கொடியும், அரச இலட்சினையும்

உலகின் ஏனைய நாடுகளை போன்றே அரசியலமைப்புச் சட்டதிட்டத்துக்கு அமைய தேசியக் கொடி, தேசியகீதம் , அரச இலட்சினை, தேசிய மரம், தேசிய மலர், தேசியப் பறவை மற்றும் தேசிய விளையாட்டு என்பனவும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் காணப்படுகிறது. அதேபோன்று இலங்கையின் கலாசாரம் அதற்கு என தனித்துவமான ஓர் அடையாளத்தை வெளிப்படுத்துகின்றது.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக

இலங்கை மக்கள் பரஸ்பரம் விருந்தோம்பும் மக்களாவர். அதுபோன்று அவர்கள் பெருமை மிக்க வரலாறு ஒன்றுக்கும் உரிமை கொண்டாடுகின்றனர். 2000 வருடங்களுக்கும் மேற்பட்ட பழமை வாய்ந்த நீர்வள நாகரீகத்தின் சூழல் நட்புத் தன்மையுடன் கூடிய நீர்பாசனத் தொழினுட்பம், கட்டட நிர்மாணக் கலை மற்றும் ஏனைய கலை ஆக்கங்கள் புதுமையாக உள்ளன. புராதன காலங்களில் இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களான மகாசேனன், மகாபராக்கிரமபாகு போன்றோர் மிகத் தீர்க்கதரிசனமாக மழைநீரை முகாமை செய்து உலர் வலயப் பிரதேசங்களை வளம் பொருந்திய விவசாய நிலங்களாக மாற்றியமைத்த விதத்தினை இன்றும் கூட ஒரு முன்மாதிரியாகக் கொள்ள முடியும். இதனாலேயே இலங்கையை **''கீழைத்தேய தானியக் களஞ்சியம்''** என இன்றும் புகழ்கின்றனர். அச்சிறந்த நீர்ப்பாசன தொழினுட்பத்திற்கு உபகாரமாகவே சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் தலைமைச் செயலகம் இலங்கையில் நிறுவப்பட்டுள்ளது.


ருவன்வெலிசாய


யாப்பஹுவ சிங்கம்


கலாவாவி

இலங்கையர்களின் உணவு சுவை யானதாகவும், சுகாதாரமானமருத்துவக் குணமுள்ளதாகவும் உள்ளது. மரக்கறிகள் பழவகைகள், தானியங்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் கீரைவகைகள் இலங்கை மண்ணில் சிறப்பாக வளர் கின்றன. வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தி சமைக்கப்படும் இறைச்சி, மற் றும் மீன் உணவுகளில் உள்ள சுவையை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. உணவு வகைகளைத் தயாரிக்கும் முறை களில் காணப்படும் தொழினுட்பமும் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.


உரு1.18 காய்கறி, பழங்கள், மரக்கறி மற்றும் வாசனைத்திரவியங்கள்

இலங்கை மக்களிடம் காணப்படும் சுதேச வைத்திய முறையானது எனது உள்ளத்தைக் கவர்ந்ததெனக் குறிப்பிட முடியும். மரஞ்செடிகளைப் பிரதானமாகக் கொண்ட இவ்வைத்திய முறையானது மனிதனின் உடல், உள மற்றும் ஆன்மீக ரீதியிலான தேகாரோக்கியத்தை வழங்குவதற்குப் பெரிதும் உதவுகின்றது. இலங்கையின் சுதேச வைத்தி யத்திற்கு நீண்டகாலந்தொட்டே மிக முன்னேற் றமான தொழினுட்பம் ஒன்று காணப்பட்டுள்ளது என்பதற்கு புவிச் சரிதவியல் காரணிகள் சான்று பகர்கின்றன.


உரு 1.20 புராதன வைத்திய ஓடம்


1.19 அகழ்வுகளின் போது கண்டறியப்பட்ட சத்திர சிகிச்சை உபகரணங்கள்

இலங்கையின் வரலாற்றுப் பராம்பரிய இலக்கியங்களும், படைப்பிலக் கியங்களும் மிகவும் சிறப்பு மிக்கவை. இவற்றின் மூலம் இந்நாட்டு மக்களின் கலைத்திறனை அறிந்து கொள்ள முடிகிறது.



மலையக பாரம்பரிய நடனம்



முகமூடி நடனம்



1.23 மரச் செதுக்கல்கள்



1.24 பன் உற்பத்திகள்

பல்வகை கலாசார சமூகம் ஒன்றில் காணமுடியுமான பல்வகைத் தன்மையூடாகக் கட்டியெழுப்பப்பட்ட ஒற்றுமை இலங்கை மக்களிடம் காணப்படும் இன்னுமோர் சிறப்பு இயல்பாகும். வேறுபட்ட இன, மதங்களைச் சேர்ந்த இலங்கைப் பிரசைகள் சமத்துவமாக வாழ்கின்றனர்.



திருக்கேதீஸ்வரக் கோயில்



மாத்தறை முஸ்லிம் பள்ளிவாசல்



மடுமாதா தேவாலயம்

உரு 1.25

மிகப்புராதன காலத்திலிருந்தே இலங்கை வெளிநாட்டவர்களின் கவனத்தை ஈர்த்த ஒரு தேசமாகும். பல்வேறு நாட்டவர்களாலும் வெளியிடப்பட்ட பின்வரும் கருத்துக்களிலிருந்து இது புலப்படுகின்றது.

‘‘முன்னெடுக்கப்பட்டுள்ள மிகப் பிரமாண்டமான குள நிர்மாணத்தை இலங்கையிலன்றி சிலவேளை வேறு நாடுகளில் காணமுடியாது.”
**R.L.புரோகியர்**

‘‘இறைவனால் இப்பூவுலகில் படைக்கப்பட்ட எழில் நிறைந்த நிலப்பிரதேசம்” **ஜீவால் ருபேரு**

‘‘பூமியின் சொர்க்கம்” **ஜோன்.டி மார்ஞோலி**

‘‘இந்நாட்டு மக்கள் ஒழுக்கவிழுமியங்கள், மனிதநேய உபகாரங்களில் ஈடுபடுபவர்கள்”. **ரொபட் நொக்ஸ்(எதா ஹெலதிவ)**

‘‘செரன்டிப்” (சுவர்க்க பூமி) **அராபியர்கள்**

**செயற்பாடு IV**

1. இலங்கையில் உலகப்பிரசித்திப் பெற்றவை எனக் குறிப்பிடப்படும் இடங்கள் தொடர்பாகப் பத்திரிகை ஒன்றிற்குக் கட்டுரை ஒன்றை எழுத நீங்கள் முன்வைக்கும் தகவல்களுடன் தொடர்புடைய இடங்களைப் பெயரிடுங்கள்.


2. **எம்மண்ணின் வளம் பற்றி என்னவென்று உரைப்பேன்**
   **வெட்டி எறிந்த தண்டுகூட தளிர்விட்டு முளைக்குமே**
   **இம்மண்ணில்**

   இக்கவிதையை வாசித்ததன் பின் எமது நாடு பற்றி உமக்குள் ஏற்படும் உணர்வுகளைச் சுருக்கமாக விளக்குங்கள்.

## 1.7 உலகில் எந்த இடத்திலாயினும் நல்லனவற்றை நல்லனவாக ஏற்றுக் கொள்வோம்

மிகவும் பழமை வாய்ந்த நாகரிகத்தையுடைய மனிதர்கள் நவீன உலகின் துரித முன்னேற்றத்துக்குரிய ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டவர்களாவர் என்பதை நாம் கௌரவத்துடன் நினைவுகூர வேண்டும். உதாரணமாக வேட்டையுகத்தில் நெருப்பைக் கண்டறிந்தமை, விவசாய யுகத்தில் சில்லு கண்டறிந்தமை என்பன இன்றைய யுகத்தில் செய்மதித் தொழினுட்பம்வரை

விருத்தியடைந்துள்ளது. அப்போது பெறப்பட்ட வெற்றிகளை ஓர் இனத்திற்கோ அல்லது ஒரு நாட்டிற்கோ வரையறுக்க முடியாது. மாறாக அனைத்து மனிதர்களும் அவற்றின் பலனை அனுபவிக்கின்றனர். இதன்படி உலகின் எந்தவொரு கலாசாரத்திலும் காணக்கூடிய சிறந்த அம்சங்களை ஏனைய கலாசாரங்களை போஷிப்பதற்காக ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த முடியும் என்பதாகும்.



சில்லு கண்டு பிடித்தல்



சந்திரனில் நீல்ஆம்ஸ்ட்ரோங் காலடி எடுத்து வைத்தல்

## மனித விருத்தியில் பங்களிப்புச் செய்த நாகரிகம்

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய நாகரிகங்களின் கலாசாரப் பண்புகள், அந்த நாகரிகங்களுக்கு மட்டும் என்று வரையறுக்கப்படாது, அவை உலகின் ஏனைய நாடுகளின் மதிப்பிற்கும் உட்பட்டன. அவ்வாறான நாகரிகங்கள் அதற்குப் பிற்பட்ட காலங்களில் மேலும் விருத்தியடைந்தன.

| நாகரிகங்கள் | உலகிற்கு அளித்த சில கொடைகள் |
|---|---|
| சிந்துநதி நாகரிகம் | நகர் நிர்மாணம், வீட்டு நிர்மாணம், ஆபரணம் |
| மொசப்பெத்தேமியா நாகரிகம் | நிலவரைபட முறை, கணித முறை, நட்சத்திர விஞ்ஞானம், நாட்காட்டி |
| குவாங்கோ நாகரிகம் | அலங்கார மட்பாண்டங்கள் |
| நைல்நதி நாகரிகம் | பிரமிட், நிர்மாணத் தொழினுட்பம் |
| மாயா மற்றும் இன்கா நாகரிகம் | நகர்நிர்மாணம், சொக்லட், பானம் |

உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் பின்பற்றும் பிரதான மதங்கள் உருவாகிய நாடுகளின் கலாசாரங்கள் கூட அந்நாடுகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டவையல்ல. அவ்வாறே தனிநபரது பண்பு விருத்திக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய மகாவம்சம் உலகம் முழுவதும் ஆய்வுக்குட்படுத் தப்படவேண்டியதொன்றாகும்.


| சமய கோட்பாடு | தோன்றிய பிரதேசம் | கோட்பாட்டை உள்ளடக்கிய நூல் |
|---|---|---|
| பௌத்த கோட்பாடு | இந்தியா | திரிபீடகம் |
| இந்து சமயம் | இந்தியா | வேதநூல்கள் |
| கிறிஸ்தவ சமயம் | மத்திய கிழக்கு | புனித பைபிள் |
| இஸ்லாம் சமயம் | மத்திய கிழக்கு | புனித அல்குர் ஆன் |

தமது சமய முக்கியஸ்தலங்களைத் தரிசிப்பதற்காகவும், அதன் கலாசாரங்களைக் கற்றுக் கொள்வதற்காகவும் உலக மக்கள் வெளிநாட்டு யாத்திரைகளில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக புத்தகயா, திருப்பதிக் கோவில், வத்திக்கான், புனித மக்கா ஆகிய தலங்கள் உலக கலாசார உரிமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.


1.28 மேரி கியூரி
(ரேடியம் கண்டுபிடித்தல்)

விஞ்ஞானம், கலை, இலக்கியம் என்பன எந்த கலாசாரத்திற்கு உரித்தாயினும் தேச எல்லையைக் கடந்து ஏனைய கலாசாரங்களை உடைய மனிதர்களின் கையாள்கை மற்றும் இரசனைகளுக்கும் உட்படுகின்றன. விஞ்ஞான கண்டுபிடிப்புகளினால் கிடைக்கப்பெற்ற சேவைகள் அவற்றை கண்டுபிடித்த நாடுகளுக்கு மட்டுமன்றி ஏனைய நாடுகளின் மக்களுக்கும் கிடைக்கப் பெறுகின்றன.

உலகில் சிலை, சிற்பம், ஓவியம் மற்றும் கட்டட நிர்மாணம் போன்ற ஆக்கங்கள் அவை தோன்றிய கலாசாரங்களுக்குக் கீர்த்தியைக் கொடுப்பது போலவே முழு உலகிற்கும் உரிய கொடையாகும்.


மொனாலிசா


ஈபில் கோபுரம்



அஜந்தா சுவர் ஓவியம்

உரு 1.29

முன்னோடிகளின் வாழ்க்கைச் சரிதைகள் உலக மக்களினது வரவேற்புக்கும், கௌரவத்திற்கும் உரித்தானவையாகும்.



துயரப்பட்ட குழந்தைகள் மற்றும் குஷ்ட நோயாளர்களின் துயரத்தை துடைக்கப்பாடுபட்ட அன்னை தெரேசா



உலகப்புகழ் பெற்ற எழுத்தாளர் பர்னாட்ஷா



சீனாவை புதிய பாதையில் இட்டுச் சென்ற மாவோ ஷேதுங்

எழுத்து, சினிமா, நாடகம் மற்றும் பாடல்கள் முதலிய துறைகளின் உயர் படைப்புக்கள் மூலம் உலகம் முழுவதிலும் இரசிகர்கள், பார்வையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தோன்றியிருக்கிறார்கள்.



1.31 வெனிசுலாவின் வியாபார படச்சட்டகம்

எல்லா மக்களுக்கும் முன்மாதிரியாக எடுக்கக் கூடிய, ஏனைய சமூகங்களுக்குரிய சிறந்த பண்புகளும் காணப்படுகின்றன. இரண்டாம் உலகமகா யுத்தத்தினால் அழிந்து நாசமடைந்த ஜப்பான், முதல்நிலை கைத்தொழில் நாடாக மாறுவதற்குக் காரணம் அந்நாட்டு மக்கள் அர்ப்பணிப்புடனும், தைரியமாகவும், தியாகத்துடனும் செயற்பட்டமையேயாகும். இது உலகின் சகலரது பாராட்டுக்கும் உரித்தாகியது. அதே போல ஏகாதிபத்தியத்துக்கெதிராக இந்தியா முன்னெடுத்த தேசியக் கொள்கையில் அடங்கியிருந்த தேசாபிமானம் காரணமாகவே படிப்படியாக அந்நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக

## 1.8 பரஸ்பர பற்றுதலினூடாக சகவாழ்வினைக் கட்டியெழுப்புவோம்

அநுராதா சிறிய பாடசாலையொன்றின் மாணவி. அவள் பாட்டன், தாய், தந்தை மற்றும் இளைய சகோதரன் ஆகியோருடன் வாழ்ந்து வந்தாள். ஒருநாள் அவளுடைய பாட்டன் திடீரென கடுமையாக நோய்வாய்ப்பட்டார். அவளுடைய தாய் பக்கத்து வீட்டார் ஒருவரை அழைத்து வீதியில் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றினை நிறுத்தி, பாட்டனின் சுகவீன நிலையை எடுத்துக் கூறினாள். சாரதி அவர்களுக்கு உதவச் சம்மதித்தான். அவர்கள் மீள திரும்பி வரும் வரை அவருடைய சிறிய சகோதரனையும் வீட்டையும் கவனித்துக் கொள்வதற்காக பக்கத்து வீட்டு வசந்தி மாமி முன்வந்தாள். அனுராதாவும், தாயும், பக்கத்து வீட்டுக்காரரும் சேர்ந்து பாட்டனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். பாட்டன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், வைத்தியசாலை அதிகாரிகள் பாட்டனுக்குச் சிறந்த சிகிச்சைகளை மேற்கொண்டனர். அதனால் பாட்டனும் விரைவாகக் குணமடைந்தார். அவளுடைய தாய் மருத்துவமனை ஊழியர்களுக்கும் உதவிகளைச் செய்த அனைவருக்கும் நன்றி கூற மறக்கவில்லை.

மேற்குறித்த நிகழ்வு போன்ற சந்தர்ப்பங்களுக்கு நீங்களும் முகங்கொடுக்க நேரிட்டிருக்கலாம். இச்சந்தர்பங்களில் அயல்வீட்டார், உதவியில்லாமலும் வைத்தியசாலை ஊழியர்கள் சிகிச்சைகளை மேற்கொள்ள உதவ முன்வராதிருந்தாலும் பாட்டனுக்கு என்ன நடந்திருக்கும்?

குடும்பம் எனும் ஒரு சிறு அலகிலேயே மனிதன் பிறக்கிறான். அதே போல் குடும்பத்திலேயே நீண்ட பிள்ளைப்பருவத்தினைக் கழிக்கவேண்டியிருப்பதால் மனிதனுக்கு குடும்பத்திலுள்ள ஏனையோரது அன்பும், அரவணைப்பும் அத்தியாவசியமாகும். அதேபோல வாலிப மற்றும் வளர்ந்த பருவத்திலும் தமது உறவினர்கள் நண்பர்கள் அயல்வீட்டார் மற்றும் பல்வேறு சமூக நிறுவனங்களின் ஒத்துழைப்பும் அவசியமாகின்றது.

அப்படியாயின் மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் ஏனையோருடன் உறவுகளைப் பேணவேண்டியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஏனையோரில் தங்கியும் மற்றும் சில சந்தர்ப்பங்களில் ஏனையோரைப் போஷித்து அவர்களுக்கு உதவிசெய்தும் மனிதன் வாழ்கின்றான். எந்த ஒரு நபருக்கும் தனித்து வாழ முடியாது. பல்வேறு நபர்களுக்கு உதவி செய்யவும் அவர்களது உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும், அன்றாட வாழ்க்கையில் எமக்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அதாவது மனிதர்களுக்கிடையில் பரஸ்பரம், பற்றுதல் ஒன்று காணப்படுகின்றது. அப் பரஸ்பர பற்றுதல் காரணமாக மனிதர்கள் ஒத்துழைப்புடன்

தமது காரியங்களை இலகுவாக நிறைவு செய்து கொண்டு வாழ்கின்றனர். இதனால் மனித சமூகத்தில் சகவாழ்வு கட்டியெழுப்பப்படுகிறது.

**பரஸ்பரம் பற்றுதலும், சகவாழ்வும்**
**குடும்பத்துக்குள்ளேயே ஆரம்பமாகின்றது**

பின்வரும் செய்தித் தலைப்புக்கள் உலகின் பல்வேறு இனங்களுக் கிடையிலான அந்நியோன்யம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை வெளிப்படுத்தும் சில சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுகின்றன. ஒரு நாட்டு மக்கள் எதிர்நோக்கும் இன்பகரமான அல்லது துன்பகரமான அனுபவங்களின்போது உலகின் ஏனைய நாட்டு மக்களும் அவற்றை உணர்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

சுனாமியால் இடம்பெயர்ந்த இலங்கையருக்கு வெளிநாட்டு உதவி

புதிய அமெரிக்க ஜனாதிபதிக்கு இலங்கை அரசு வாழ்த்து தெரிவிக்கின்றது

2012 ஒலிம்பிக் விளையாட்டு லண்டன் நகரில்

ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஒன்று கூடுகின்றது

சார்க் அரச தலைவர்கள் மாநாடு கொழும்பில்

பாடசாலை நூலகங்களுக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்திலிருந்து உதவி

மனிதன் இயல்பாகவே ஒரு சமூகப் பிராணியாவான். இதன் காரணமாகவே குழு உணர்வு, சமூகப் பொறுப்பு, ஒற்றுமை போன்ற கோட்பாடுகள் மனித சமூகத்தில் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. மனிதன் பிறப்பது குடும்பம் எனும் சிறிய சமூக அலகினுள்ளேயாகும். இக்குடும்பத்தின் வளர்ச்சி மற்றும் வெற்றி என்பன அக்குடும்ப அங்கத்தவர்களின் வளர்ச்சியிலும் வெற்றியிலுமே தங்கி உள்ளது. எனவே குடும்பம் மற்றும் அவன் வாழும் வீட்டினுள் இடம்பெறும் அனைத்து நடவடிக்கைகளும் அக்குடும்பத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற வேண்டியுள்ளது.

பாடசாலையின் உள்ளேயும் சகவாழ்வுடனான செயற்பாடுகள் மூலம் எதிர்பார்க்கின்ற இலக்கினை அடையமுடிகின்றது. அவ்வாறே நாம் வாழும்